

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5.11.2024 அன்று நேற்றிரவு விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு, பரிசுகளை வழங்கினார். வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 5.11.2024 அன்று நேற்றிரவு விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட சாலமேடு பகுதியில் அமைந்துள்ள விழுப்புரம் மாவட்ட அரசு மாதிரி பள்ளியில் மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு, பரிசுகளை வழங்கினார். வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர் இரா.இலட்சுமணன் (விழுப்புரம்), அன்னியூர் அ.சிவா (விக்கிரவாண்டி), சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர்.தாரேஸ் அஹமது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சி.பழனி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சுருதஞ் ஜெய் நாராயணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் உள்பட ஆசிரியர்கள் உடன் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக விழுப்புரம், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்குச் செல்ல உள்ளார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

**07/11/2024 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 09:30 மணி | முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பு | கலைஞர் அறிவாலயம், தஞ்சாவூர். |
| காலை 09:50 மணி | மக்களவை உறுப்பினர் அலுவலகம் மற்றும் நூலகம் திறப்பு விழா | இராமநாதன் ரவுண்டானா, தஞ்சாவூர். |
| காலை 10:15 மணி | பூதலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் 'கல்லணை' செல்லக்கண்ணு அவர்களின் இல்லத் திருமண விழா | மகாராஜா மஹால், தஞ்சாவூர். |
| காலை 11:15 மணி | கழகப் பவள விழாவை முன்னிட்டு கழகக் கொடியேற்றுதல் | கண்டியூர், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:00 மணி | பேறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் சிலைத் திறப்பு மற்றும் நூலகம் திறப்பு | கோனேரிராஜபுரம், திருவையாறு தெற்கு ஒன்றியம், தஞ்சாவூர். |
| மதியம் 12:45 மணி | அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | அண்ணா மண்டபம் தஞ்சாவூர் |
| மதியம் 01:15 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்-துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு | பி.எல்.ஏ. திருமண மஹால், தஞ்சாவூர். |
| இரவு 07:00 மணி | மிசா ஏழுமலை அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு | இராம்லக்ஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள்: 04-11-2024



# புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை. நவ.7

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : -

நாளை (8.11.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணியன் தலைமையிலும் , பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கழக சொத்து பாதுகாப்பு குழுத் தலைவர் அறந்தாங்கி ராஜன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது . இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் , ஒன்றிய , நகர ,பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: பிஎல்ஏ 2, பிஎல்ஏ 3 பணிகள் குறித்து ஆலோசனை, கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

## சேலம் கிழக்கு மாவட்டத்தில்

# பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!



சேலம், நவ. 7-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு மற்றும் வீரபாண்டி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு பின்வரும் பட்டியலின் படி பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய எனது தலைமையிலும், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் 081- கெங்கவல்லி க. ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 ஆத்தூர் - எம்.எஸ். கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 - ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091- வீரபாண்டி டி.கே. கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆகியோரது முன்னிலையிலும் நடைபெறும். இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் வாக்கு சாவடி பாகமுகவர்கள் BLA 2 மட்டும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**வீரபாண்டி**

கலைஞர் மாளிகையில் இன்று (7.11.2024) காலை 11.00 - வீரபாண்டி ஒன்றியம் இளம்பிள்ளை பேரூர் ஆட்டையாம்பட்டி பேரூர்,

மதியம் 12.00 - சேலம் தெற்கு ஒன்றியம்,

மதியம் 12.30 - பனமரதுப்பட்டி ஒன்றியம், பனமரத்துப்பட்டி பேரூர், மல்லூர் பேரூர்.

**ஏற்காடு**

தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் இன்று மாலை 3.00 - அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம், அயோத்தியாப் பட்டணம் பேரூர்

மாலை 4.00 - அயோத்தியாப் பட்டணம் வடக்கு ஒன்றியம், பெத்தநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம், ஏற்காடு ஒன்றியம்,

மாலை 5.00 - வாழப்பாடி வடக்கு ஒன்றியம், பேளூர் பேரூர், வாழப்பாடி பேரூர்,

மாலை 5.00 - வாழப்பாடி தெற்கு ஒன்றியம்,

**ஆத்தூர்**

தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் நாளை 8.11.2024 மாலை 3.00 - பெத்தநாயக்கன் பாளையம் வடக்கு ஒன்றியம், பெத்தநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றியம், பெத்தநாயக்கன்பாளையம் பேரூர், பெத்தநாயக்கன் பாளையம் மத்திய ஒன்றியம், ஏத்தாப்பூர் பேரூர்,

மாலை 5.00 - ஆத்தூர் ஒன்றியம், கீரிப்பட்டி பேரூர், ஆத்தூர் நகரம், நரசிங்கபுரம் நகரம் - ஆத்தூர் துளுவேளாளர் திருமண மண்டபம்

**கெங்கவல்லி**

ஸ்ரீகுமரன் மஹாலில் 9.11.2024 அன்று மதியம் 2.00 - கெங்கவல்லி ஒன்றியம், கெங்கவல்லி பேரூர், தம்மம்பட்டி பேரூர், செந்தாரப்பட்டி பேரூர், தெடாவூர் பேரூர்,

கொங்கு திருமண மண்டபத்தில் 9.11.2024 அன்று மாலை 4.00 - தலைவாசல் வடக்கு ஒன்றியம், தலைவாசல் மத்திய ஒன்றியம், தலைவாசல் தெற்கு ஒன்றியம் வீரகனூர் பேரூர் - பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

பொருள்: வாக்காளர் பட்டியல் சேர்த்தல் நீக்கல் சம்பந்தமாக ஆலோசிக்கப் படுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி மேற்கு மற்றும் கிழக்கு சார்பாக பெரியளூரில் நடைபெற்ற பாக முகவர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணை செயலாளர், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் எழில்மாறன் செல்வேந்திரன் பங்கேற்று சிறப்பித்தார். இந்நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர் ஸ்ரீதேவி அண்ணாதுரை, அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எல். குமார், அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், மாவட்ட கவுன்சிலர் சரிதா மேகராஜன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், மும்முடி குமாரசாமி நல்லம்மாள் திருமண மண்டபத்தில் 05.11.2024 அன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித் ஆதித்யநீலம், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.